பேசும்படங்களில் சிறந்த தமிழ் பேசும் படம் இது ஒன்றே!

வள்ளித்திருமணம் தயாரித்த


கல்கத்தா பயனீர் பிலிம் கம்பெனியில் தயாரிக்கப்பட்டு

சுத்தமாகவும், மிகத் தெளிவாகவும் ரிகார்டு செய்யப்பட்ட

**60** நூதன பாடல்கள் **60**

நிறைந்த

# ஸ்ரீ கிருஷ்ண லீலா




## என்ற தமிழ் பேசும் படம்

*Sole Distributors :—*

**ANGEL FILMS, LTD., SALEM (S. I.)**

# கிருஷ்ண லீலாவின் முக்கிய நடிகர்கள்

ஓடியன் பிளேட் வண்ணத்தி பாட்டு பாடும்

## *P. S.* சிவபாக்யம்

தேவகி, இடைச்சி

ஓடியன் பிளேட் கன்னையா கம்பெனி

## *C. V. V.* பந்துலு அய்யர்

வசுதேவர்

மதுரை பால விநோத சங்கீத சபா

## *C. S.* ஜெயராமன்

கிருஷ்ணன்

இந்தியன் சார்லி டம்பாச்சாரியில் 11 வேடந்தரிக்கும்

## *C. S.* சாமண்ணா அய்யர்

மகரந்தன் என்னும் ராமன்

மதுரை பால மோகன ரஞ்சித சங்கீத சபாவின் உபாத்தியாயர்

## *M. S.* முத்து கிருஷ்ணன்

ஆர்பாட்ட கம்சன்

மதுரை

## *K. S.* இராஜாம்பாள்

யசோதை

ஆரியகான ***T. N.*** **வாசுதேவ பிள்ளை**

***T. P.*** **மனோஜி ராவ்** முதலியோர்

இடையர்கள்

**ராஜராஜேஸ்வரி**

**மீனாம்பாள்**

**பொன்னுத்தாய்** முதலியோர்

இடைச்சிகள்

---

எங்கள் அடுத்த உன்னத தமிழ் பேசும் படத்தை
எதிர்பாருங்கள்

**Watch for our Next Super Tamil Talkie**

நலமே நல்க:

# ஸ்ரீ கிருஷ்ணலீலா

## முதல் காக்ஷி—மஹா விஷ்ணுவை தேவர்கள் துதித்தல்.

1 (பாட்டு) பரபிர்ம மெட்டு

சதாசிந்தையோடு தோத்திரம்—தனைமிகப் புரிந்தோம் நாமே (சதா)
உதாரவா நிதானவா—உறுதியாகஉதவுந் தேவா (சதா)
திருமாதவ ஜெயமேமேவ—திருவடிநாமே தேடினேமே
சேவை தாவா தேவதேவா (சதா)

2 நாரதர் (பாட்டு) அரி ஹர மாதவ என்ற மெட்டு

பரமதயாளனே பரிவாயருளே—பாரினில்நாமே பரிதவித்தோமே (பரம)
காரயந்தோ கம்ஸன்செய்தீதே—தீராய்சொன்னேம் தெரிவீரிப்போதே
நேரேசொல்தவறாதே நிஜமாயறிவீரிப்போதே (பரம)

3 மஹாவிஷ்ணு (பாட்டு) ஸ்ரீரகுவம்ஸ திலாக்ய என்ற மெட்டு

பாதகனுமழியஎவரும் சுகமதடையநானே
பாரும் செய்வேனே (பாத)
சாதகமதாயடுத்தே தான்முயன்றிட்டாலும்
ஏதுமாகுநாளன்றி இசைந்திடாதுமேலும் (பாத)
தேவகிக்குமீடில்வசு தேவனுக்கும்பாரில்
மேவிசிசுவாகியுங்கள் வினையொழிப்பேனேரில் (பாத)

4 கம்ஸன் (பாட்டு) சந்தம்

வானசரீரிசொல் லோதிட வேமன மானது—நோகிற தாகையினால்
யானிது போதிலெ னதுசகோதரி—யாயினு மாளுற வாளிதனால்
வீசிடி லோசுக மாகும போயமு—மேவிடு மோபி ரேதுவிடேன்
காசினி மேல்பிற வேதில ரேதிலர்—ஆசையொனடபெறு வாழ்வுறுவேன் (வா)

5 கம்ஸன் (பாட்டு)

அசரீரிசொன்னது பொய்யாதிப்பொழுதே—அடிநானுனையே கொல்வேனே
அடிநானுனையே கொல்வேனே
ஆகாதாகாநீ பெறும்சுதனாலே—யெனதுயிர்க்கே முடிவாமே
சுதனாலெனதுயிர்க்கே முடிவாமே (அச)
இவ்வாளுக்கிரை யாக்கிடிலேஉனை—எங்கிருந்துவந்திடுவான் அவன்
எங்கிருந்துவந்திடுவான் ஆஹா (அச)

6 தேவகி (பாட்டு) மாஜெகன்மோகன என்ற மெட்டு

கோபமீதே வரலாமோ கூறுவீரண்ணா
கூடவே பிறந்தாளென்று மெண்ணா (கோப)
சோபனமானவி வாகவைபோகமாம்
சுகமருவிநமது நாடேயேசையில்
துயர்தரவாள் தொடலேனோ தான்கையில்
நேய சோதரியெனவே தினமெண்ணா (கோப)

7 வசுதேவன் (பாட்டு) சாந்தமுலேகா என்ற மெட்டு

சாந்தங் கொள்வீரே—தயவொடு நீரே
தாரணி தொழ மனமே (சாங்)
ஏந்திழைமீதுநீ ராய்ந்ததீதேது (சாங்)
நீரேயுன்சோதரி—நேரினில் மாள
தாராளமாய்ச் செய்ய—தகுமோ அடாதே (சாங்)

8 தேவகி (பாட்டு) சிரைவாயில்தனில் அழுதாள் என்ற மெட்டு

ஏழையென்மீதே யிரக்கமி லாதே—இசாயிருக்காதே யிப்போதே (ஏழை)
கோழைமனத்தன் கொடுங்—கோலண்ணன்தான் செய்திடும்
நீழலால் நீடும் மெய்வாடும் (ஏழை)
அரச குலத்துவந்தும்—அதனின் சுகமிழந்தும்
சிறைவாசந்தன்னில் புகுந்தும்—தினம் வருந்தும் (ஏழை)

9 வசுதேவன் (விருத்தம்) ராகம் தோடி

ஏனோவருந்தி மயங்குகின்றாய் மெத்த—வந்திழையே
வானோரையும் விட்டதோ விதியே—யிந்த வையகத்தில்
தானேசெழித்துத் தழைத்தொளிர் தேவன்—தனே மனதில்
மானே மறவாதிருப்பாய் சுகமுறு—மார்க்க மிதே

10 வசுதேவன் தேவகி (பாட்டு) ஆதரிப்பாய் யாரிங்குண்டென் ஐயா

தேரும்மார்க்கம் தேவாகாணேம்—நாமே (தேரும்)
இனிநாமே என்செய்வோமே (தேரும்)
வருந்தினேமே திருந்திநாமே (தேரும்)
யாரினிக்காப்பாரோ நீதா—தாமரை பாதா மாமலர் வேதா
வினோதா இதந்தாதா......யினி (தேரும்)

11 தேவகி (பாட்டு) அம்ஹாபந்தே (இந்துஸ்தான் மெட்டு)

வேதையாகுதே யிவ்வேளே—வேறெதுசெய்வேனிவ் வேழை (வேதை)
மாதமோதச மான தேதி—ஆதலால் சிசுவாலனுதி (வேதை)
(தொகையரா)
கண்ணுமுள் வாங்கிக் கரங்கால்களும்—சோருதே
காதடைத்ததுமன்றி கருதும் நல்லுணர்—மாறுதே
பெண்ணாய் பிறப்பதே பிசகெனத்தான்—தேருதே
(பாட்டு)
யீதுசமயம் மாதுன்அபயம்—ஸ்ரீதரா தாமோதரா (வேதை)

12 வசுதேவன் (பாட்டு) சிங்காரலகிரி என்ற மெட்டு

எந்தையேவரதா எனதிதயமலருதய (எ)
சிந்தாகுல நிவாரண ஜெயதாரண
ஜெகமகிதல சித்தாந்த குண
காரண பூரண நாரண
மா மலர்மகழ் மகிழும முகனே
மறை பரவும் பதுமபத மதுகாமுரல்
துளப மணிபுய சிகரவரை யென
உறைமார்பா மாவிலாத

மாதவத போதனர் சகாயனென
வேயிலகு மாரகதநிற
மணிவடிவனே மறையவ ஜனகமகிபனே
மகிமைசேர் புனிதமுள ஒளியிலகிய
மலர்முகனே மாதவனே (எ)
துரிதமுடனே யென்துயரகன்றிட விரைவாக
துணையாயுடனேவர அரியமாதவம்
யென்செய்தேனே விறைவாக
அறியமாது பெருந்தேவி தன்நாயகி ஆதிமூல
நாதா அருள்தாயகா (எ)

13 தேவகி (பாட்டு தர்க்கம்) தசரதாராஜகுமாரா என்ற மெட்டு

அருந்தவக்குலமணிக்கொழுந்தே
உனைப்பிரிந்தே யிரேன்மறந்தே—மனந்துணிந்தே
நரஹரி நினை மாற்ற நாயகர்பாலே
நவின்றதை அவரிந்த நாளேமுன்னாலே
அறிவித்த செயலதனாலே மென்மேலே
அடைந்த விசனம் மனதாலே
எண்ணினாலே துயராலே இனிமேலே (அருந்)

வசுதேவன் (பாட்டு)

கலங்கிட வேண்டாமென் மாதே
வருந்தாதே இதுதீதே நன்மையீதே
நிலைதெரிந்து மிப்படி நீமயங்காதே
நேரம் வீணாகப்போகும் நினைத்துப்பார் மாதே
நலிவது தீருமே நம்புதப்பாதே
நலம்வரும் பாலனைத் தாராய்
துயர்தீராய் மனந்தேராய்—நீஆராய் (கலங்)

14 வசுதேவன் (பாட்டு) தேவா அசுரகுலத்தோரே என்ற மெட்டு

தேவி உனதருளைத்தானே
தேடிவந்தேன் சிந்தை
வேதனை தீரவேண்டினேனே
திறமாய் அக்கரைநாடச்
செய்வாய் இப்போதே
குறையாச் சலமே கொடுத்தருள தப்பாதே (தேவி)

15 தேவகி (பாட்டு) கிளிக்கண்ணி

நான்பெற்றபாலரெல்லாம்
நசித்துஉயிர்விடவே
தான்கொன்றேசாதித்தீரே
அண்ணா தயவுவைத்திதைகாப்பீரே (நான்)
பெண்தான் இதனால்வுந்தன்
பேரழிக்கலாகுமோ
மண்மீதே இதுபழியே அண்ணா
வருந்தவருதென் மொழியே (நான்)

கொல்லாதீர் இது பெண்ணே
கொஞ்சம் தயவுயெண்ணே
மெல்லியுன் தங்கைநானே அண்ணா
வேண்டியே நின்றிட்டேனே (நான்)

16 கம்சன் (பாட்டு)

நாரியே உன்சொல்நான் கேளேனே
நவின்ற வார்த்தைதனை மறந்தேநீ
ஞாயமின்றியே ஓதுவதேனோ (நாரி)
என்னுவிபோ மென்பதை யானே முன்பறிந்துகொண்டும்
ஆகாதவார்த்தை நீபுகன்றிடில் கேட்பேனோ மீண்டும (நாரி)
அமரர்கூறினும் அதையும்மீறுவேன்
அரைக்ஷணத்திலே அறுத்தேதீருவேன்
ஆயிக்கணமிது மேவிக்கொலையதை
தானிச்சயமே செய்வேனே
பாரில் பலபல வீரர்களாயினும்
பரிந்துவந்தால் கொல்லுவேனே
இதுநிச்சயம் இதுநிச்சயம் (நாரி)

17 வசுதேவன் (பாட்டு) தர்க்கம் வேதியர்தவ வேடங்கொண்டிந்த என்ற மெட்டு

பாவமேசூழும் மேவியே கேளும்—தாவியேநானும் நாடும் கொலையாலதி (பா)

கம்ஸன் (பாட்டு) நில்லடா எந்தன் எதிராகவந்து நீ நில்லடா என்ற மெட்டு

கொல்லுவேன் எவர்கூடி வந்தாலும்—நான் வெல்லுவேன்
சொல்லை மறந்திட்டாய்—மெல்ல நீ முன்னிட்டாய்
துரிதத்தினிலதை யெப்படி—விரிகத் திதனில்வெட்டி (கொ)

வசுதேவர் (பாட்டு)

மைத்துனு வும்மைநத்தி வேண்டினேம்
சித்தம்நீர் தயைசெய்யும் ஜெகமே—தொழும் (மை)

கம்ஸன் (பாட்டு)

மட்டியேசும்மா வாதிக்கின்றாய்—வார்த்தை தட்டியே
கெட்டிக்காரனென்றேஎட்டி அருகில்நின்றே—கலிசெயவோ யெனையும் (ம)

18 கிருஷ்ணன் (பாட்டு) நமஸ்த்தே என்ற மெட்டு

நமஸ்காரமே யென்மாதா பிதாபாத (ந)
சமானமிலா சதாநந்த—குமாரப்புனித தயாளவிந்த (ந)
ஆதவர்மகிழும் நாதா—ஆகமமறிந்த நீதா
சாதனை சத்ய விரதா—ஒதரு முத்துகிருஷ்ண நீதா
ஆதார சொல்லா சீர்வாதா—மேதருங் கமலபாத (ந)

19 நந்தகோபர் (பாட்டு)

மனதார மிகமகிழ்ந் தேன்விற்பனராக குழல்நாத மிசைத்ததா— (மன)
வினிதாகமுழு

(தொகையரு)

எங்களருந் தவமாயிலகு மாதவனே—சங்கீத ஞானமிர்தந் தங்கு
மென் புதல்வனே

(பாட்டு)

எங்குமே போகாமல் இங்கிருந்தே நீயும்—செங்கரத்தால் படம்
மங்களமா யெழுதேன் (மன)

20 இடைச்சி (பாட்டு)

பால் வாங்கலையோ நல்ல
பக்குவமாகவே யிக்கணத்தில்கறந்த பசும் (பால்)
சர்க்கரை கேளாது தன்சுவை மாறாது
மிக்கச்சிறந்தது விடியக் கறந்தது (பால்)
நெய்வெண்ணெய் மோர்தயிர் நேர்மைபோல் செய்யலாம்
நீடித்திருந்திடும் பால்கோவா கிண்டலாம்
மெய்யிதை சாதத்தில் மேன்மையாய் சேர்க்கலாம்
மேலானபோஜனமாகச் சாப்பிடலாம்
பால் வாங்கலையோ பால்
தயிர் வாங்கலையோ தயிர்
மோர் வாங்கலையோ மோர்
பாலோ பால் பால்
தயிரோ தயிர் தயிர்
மோரோ மோர் மோர்
பாலோ பால் பால் பால் தயிரோ தயிர் தயிர் தயிர்
மோரோ மோர் மோர் மோர் பால் தயிர் மோர் நெய் (பால்)

21 இடைச்சி (பாட்டு)

அம்மாமாரே ஆச்சிமாரே
பாலுவாங்குங்கோ
இது அப்பட்டமான பசும்பால்
இப்போதான் காச்சி கொண்டாந்தேன் (அம்)
இது ஆழாக்குப்பால் அரையணாத்தான்
அகவிலைநான் சொல்லகில்ல மாட்டேன் (அம்)
போய் அப்புறம்வாரேன் காசுதாங்கோ
எப்பவுங்கடனா ஊத்ராது தானுங்க (அம்)
உங்க அடுத்தவீட்டுக்கும் எதித்தவீட்டுக்கும்
அடிக்கடி நான்தான்தருவது (அம்)
தோ அந்தத்தெருவு யிந்தத்தெருவு
சந்துபொந்தெல்லாம் நான்தருவது (அம்)
பாலுவாங்குங்கோ கெட்டித்தயிருவாங்குங்கோ
பசுமோரு வாங்குங்கோ (அம்)

22 இடைச்சி (பாட்டு)

மதிச்சியத்திலே குடியிருக்கிறது எ அம்மா
மதுரையிலே பாலுவிக்கிறது-வந்து விக்கிறது வந்து விக்கிறது

நான்-புதுசு புதுசாய் உடையுடுத்தாது-என்
புருஷன் மனது போலவேநான் நடந்துகொள்ளுறது
நான்-காலையிலே தயிரு விக்கிறது-வ அம்மா
இந்த கடும்பகலில் மோருவிக்கிறது
வந்து விக்கிறது-வந்து விக்கிறது
எங்க-மாமி என்னை மதிப்பாக்கவே வைத்துக்கொள்ளுறது
நான் புறப்பட்டு வரும்போது-எந்த பெரிய சனியுன் முன்னுக்கு வந்ததோ
ஐயோ-கொண்டுவந்த பால்தயிர் மோர் கூடையில் அப்படியேயிருக்கிறது
விற்கலே

(தனிப்பேச்சு)

கண்டயிடமெல்லாம் கடனாய் போச்சுது
கடைக்குப்போகணும் காசு சேரணும்
இனிமேல் நான் போய் மிளகாரைக்கணும்
இரண்டு பிள்ளைக்கும் பால் கொடுக்கணும்
விராட்டித்தட்டணும் வெளியேபோடணும்
வெந்நீர் வைக்கணும் மேல் குளிக்கணும்
ஐயோ-உலையும் வைக்கணும் உள்ளதைக் காச்சணும்
அண்டா கிண்டா கொப்பரை சருவம் அடுக்குபாத்திரம் லொட்டு லொசுக்கு
எல்லாம் விளக்கணும் தண்ணீர் நிறப்பணும்
ஐயோ-அதற்கு பிறகு ஸ அப்பாடி என்று
அசைந்துகீழே படுக்கணும்

(பாட்டு)

செத்த-பால் வாங்கலேயோ பாலு பால் வாங்கலேயோ பாலு
பாலோ பாலு தயிரோ தயிரு மோரோ மோரு (மதி)

23 யசோதா (பாட்டு) இந்துஸ்தான் மெட்டு

ஸ்ரீஜானகி சமேத ராம நாம சுந்திரா
ரகு ராமச்சந்திரா ஜனநேம சுந்திரா (ஸ்ரீ)
உனதிருபதமல ரனுதினந்தானே
யெனதொரு மனதினில் துதிபுரிந்தேனே
திருதசரதன்மகிழ் செல்வசீமானே
தருவாயருளே யிவ்வகில பூமானே (ராமச்சந்திரா)

24 இடைச்சி (பாட்டு) என்னசெய்குவோம் தஞ்சம் நீரே என்ற மெட்டு

கொண்டுவந்த பாலையெல்லாம் குடித்துவிட்டானே
கொடியவன் தானம்மா
கண்டோரநேகம் விண்டோவினோதம்
சண்டாளனேபாரும் நீரும் (கொ)

25 யசோதை (பாட்டு)

எப்போது மிதுவே தொழில்தானா
கிருஷ்ணா நீயிப்படி செய்யலாமா
சம்பன்னராஜ கோபாலா
நம் வீட்டிலில்லாத தயிர்பாலா (எப்)

26 கிருஷ்ணன் (பாட்டு) நானேமேவினேன் என்ற மெட்டு

தாயேகேளுமே தனையன்சொல்லே
சாகசமேயிவர் கூறுகிறாரறி
யாதவனுமெனையே பழிமேவிட (தாயே)
ஓயாதெல்லம் ஒன்றாகச்சேர்ந்தே
வாயாரவே பொய்யுரைபேசி—யெனை
வம்புக்கிழுக்கின்றாரே ஏசி—யிவர்
வருவதறியுமினி (தாயே)

27 கிருஷ்ணனும் இடைப்பிள்ளைகளும் (பாட்டு) தர்க்கம்

பிள்ளைகள். பசியால் நாங்கள் வருந்த—பார்த்திருப்பதாகுமா (பசி)
புசியாதிருந்தால்மாள—நேருமே நேருமே பாருமே (பசி)
சித்தமிரங்கியே தேனுந்தாருமிப்போ—சேர்ந்துநாம்
விளையாடுவோம்
மெத்த நொந்தோம் மனமே—வேதனையே தானரியே தீர்த்தயே
வா வா (பசி)

கிருஷ்ணன் (பாட்டு)

இங்கே நில்லுங்களிப்போ—யெங்கும் போகவேண்டாம் நீங்கள் (இங்)
தங்களுக்கு தயிர் பால் நெய்—தருவேன் தருவேன் பாரிதோ (இங்)
வித்தாரமாகவே யிந்த யிடத்திலே—வேண்டிய பால் தயிருந்தருவேன்
நத்திடுவீருடனே—நானே தருவேனே வருவேனே சீராய் (இங்)

28 இடைச்சிகள் யசோதை தர்க்கம் (பாட்டு)

கிருஷ்ணன் செய்த துஷ்டத்தனத்தை—கேள்யசோதையம்மணி
உரியிலிருந்த தயிர்பால் வெண்ணெய்—உகந்துதின்றானம்மணி (கிரு)

யசோதை (பாட்டு)

எந்தன் குழந்தைக்கந்த உரிதான்—எட்டுமோ பொய் சொல்லாதீர்
நிந்தைக்கூற வந்திட்டீரோ—நீங்களென் முன்னில்லாதீர் (எங்)

29 யசோதா (பாட்டு) வினதா என்ற மெட்டு

தகுமோ நீ செய்தகாரியம் தனையனே தாமோதரனே (தகு)
முகமறியா கோபியர் வீட்டினில் பகலிரவிலும் படுகளவுசெய்ய (தகு)
விற்கும் பால்வெண்ணெய்—விளையாடுபாலரோடு எடுத்திடலாகுமா
ஊர்நிந்தை போகுமா
பரிபாலகா உன்தந்தையர்கேட்டால்—பழிபாவமேவரும் பாலகோபாலனே (தகு)

30 கிருஷ்ணன் (பாட்டு) கோபியர்கொஞ்சும் ரமணா என்ற மெட்டு

ஏதுமறியேனம்மா இதெல்லாம் சும்மா (ஏது)
மாதிவர்பாரே வம்புரைத்தாரே
சாதகமாகநேரே தானேவந்தாரே (ஏது)
நேரினில்நீரே நிஜமறிந்தீரே
ஊரினில் கேட்பாரே உண்டாக்கினாரே (ஏது)

31 யசோதா (பாட்டு) நீபோய் உறைப்பாய் அனுமானே என்ற மெட்டு

வீணான பொய்கள்யேனடி—மிக யோக்கியந்தானடி (வீ)
வீணானவனோ காணாதவனோ—விரட்டி தவறுரைத்ததிது அழகல்ல (வீ)
யேன் கிருஷ்ணன்மேலிந்த க்ரோதமே—தான் கொண்டீரிதோ அபாரதமே
சாதவனும் எதுமறியாதவனை நேரே—ஆதரவிலாது மிகவே பழி
சொன்னீரே (வீ)

32 யசோதா (பாட்டு) இந்துஸ்தான் மெட்டு

இங்கேன்வந்தாய் கண்ணே—எந்தன் தவமணியே (இ)
அங்கமெல்லாம் தூசிமண்—அடர்ந்திருக்குதே என்னடா
அடிக்கடி இங்கேவந்து—ஆடவே துணிந்தாயடா
ஆகாது எனைவிடுத்து—அகலலாகுமோ சொல்லடா (இ)
பொல்லாத துஷ்டபயல்—போக்கிரி ராமனுடனே
போகாதே நீயவனை—புரக்கணிவாரச்சுதனே
பூஉலகோர் ஆசைகொள்ளும்—புண்ய ராஜகோபாலனே (இ)

33 இடையன் இடைச்சி இடைக்கிழவி (தர்க்கப்பாட்டு)

கிழவி—வெண்ணை திருடி தின்றாயே
இடைச்சி—யென் கண்ணணையாயில்லை தாயே
இடையன்—இது மிக்கவுண்மை நம்புவாயே
கிழவி—அவள் பக்கமேநீயும் சேர்ந்தாயே
இடையன்—இல்லையே மெய்
கிழவி—எனிது பொய்
இடைச்சி—என் கண்ணணையாயில்லைத்தாயே (வெ)

34 இடையன் இடைச்சி தர்க்கப் (பாட்டு) சாலையிலே 2 மரம் என்ற மெட்டு

இடையன்—கண்ணே யழுதிடாதே காதலெல்லாமுந்தன்மீதே
கொண்டேயிருந்தேன்மாதே கொள்ளாதேவருத்தம்
உண்டோயென்சொல்தப்பாதே நீயேநல்பொருத்தம்
இடைச்சி—என்னையடிக்கவிட்டாய்—ஏதோசொல்ல வந்துவிட்டாய்
யென்முன்னில்லாதே கெட்டாய்—எகுவேனானே
எனேயெந்தன் மீதிலாசைப்பட்டாய் இனிநானில்லேனே

35 இடைச்சி (பாட்டு) கஞ்சிக்கொண்டுபோகும் இடைச்சி (பாட்டு)

மந்தையிலே மாடுமேய்க்கும் மச்சானுக்கு மத்தியானம்
மொந்தையிலே சோத்தைஊத்தி முருங்கக்கீரை வதக்கிக்கிட்டு போரேன்
மொளகாயும் வத்தலும் பொருச்சிக்கிட்டு போரேன் (மந்)
சம்பாவரிசிக்குத்தி சமயல்பொங்கி சாருவச்சி
கும்பர்நிறையப்போட்டு கொண்டானுக்கு கொண்டுபோரேன்
சோத்தை—என்கொழுந்தனுக்கு கூடச்சேத்து வாத்தே
கஞ்சிக்குடிக்கவிட்டு கட்டுசுமைக் கட்டிக்கிட்டு
அஞ்சாறுபேருங்கூடி ஆட்டப்பாட்டத்தோடு வீட்டை
தேடி—அதிசீக்கிரத்தில்போகணும் ஓடோடி (மந்

36 இடையன் (பாட்டு) பட்டுமிரட்டு மிரட்டாதடி
பெட்டைமிறட்டு மிறட்டாதடி பெண்ணே பிரிய
மெல்லாம்போதும் போடி
கொட்டுமேளத்தோடு கொண்டாந்தவுன்
கொண்டபுருஷன் சொல்தட்டலாமடி
கஞ்சிகொண்டுவர யின்னேரமா
காலைபசிபோச்சி வெகுநேரமா
கொஞ்சிவிளையாட என்னேரமா
குட்டிவாராதேநீ போதுரமா
துட்டுபணங்களை கொட்டினண்டி
தொட்டிழுத்தாபோதும் தொந்தமென்று
கட்டாயமாயினி காண்பாயடி
கருப்பக்கோனும்மகளை கட்டுவேண்டி
இடைச்சி (பாட்டு) தர்க்கம்
பெண்டாட்டியென்மேல் பொருப்பில்லையா
போகணும் வீட்டுக்கு நீவல்லையா
கண்டபடிபேசினையே காட்டிலெனையேசினையே
தண்டுமுண்டுக்காரியேநான் தானேபோவச்சொன்னே
உண்டுகவுரெனக்குமச்சான் ஒருமுழந்தான் சிலவு (பெ)
அண்டையிலிருந்தாக்கா ஆனந்தமின்னியே
அப்புறம் சொன்னதெல்லாம் ஐயே மறந்தையே
கொண்டவனேவுட்டுப்புட்டு-மச்சான்-குந்திக்கிட்டிருப்பேனோநான்
ரதியும்மதனும்போலே ராத்திரியிருந்தாயே
கெதியெனக்குநீயின்னுக் கெஞ்சிக்கிட்டிருந்தாயே
எதைத்தான்கண்டுகிட்டு-மச்சான்-யிப்படி நீபேசினுயோ (பெ)

37 இடையன் (பாட்டு)
கண்ணேயென் கண்ணுட்டிகட்டழகியே
கட்டாணிமுத்தே யென்பொண்டாட்டியே
தண்டுமுண்டுசெய்யேண்டி தாலியும் கட்டினண்டி
துண்டாகநீயிருந்தா துணைக்குத்தகுந்தவண்டி
உண்டோஎன்னையும்விட்டா ஊரிலேதுமாப்பிள்ளையும் (க)
பண்டம்பணியாரம் கொண்டுவந்துதாரேண்டி
கொண்டையிலேபூமுடிக்க செண்டோடுவாங்கிவாரேன்
அண்டையிலேநீயிருந்தா ஆனந்தமாகுமடி
டேயர்ரேடில்வில்லிடே மடக்குவோமர்ட்டை
பாடிர்ரே கூவேகூவே
யேயாதிருந்த இருக்கட்டும்மாடு
மின்னலேஓட்டிவந்து தண்ணிகொஞ்சம் காட்டலாம் (டே)
காட்டுப்போகஞ்சி கொண்டாரே மின்னளே
ஆட்டுக்குள்ளேயின்னும் ஒளியலையோவேலே (டே)
காரிக்கெடாரியும் காளைக்கலையுது
கட்டைஅவுத்துவட்டு கிட்டிருந்துபாக்கலாம்
அந்திக்குள்வளவுக்கு ஆடுமாடு போகணும்
சந்தனம் பூசிக்கிட்டு சாமியைகும்பிடனும் (டே)

38 இடைச்சி (பாட்டு) வண்ணன் வந்தானே என்ற மெட்டு

என்னுசைதுரையே எனக்குன்மேல்—இல்லையோ அக்கரையே
மன்னுஉனக்கேனோ யென்மேலிவ்வாது–பின்னுலறிவாயே சொன்னேன் தப்பாது
பில்லைக்கிடாரியை பையலும் ஹூம்—பையவே ஹூம்
பையலும் பிடிக்கப்போகையிலே காலிடறி தான்விழுந்ததையோ—ஐயோ
காயம்பட்டு போனதினுலே ஏலே—கஞ்சிகாச்ச நேரமுமாச்சு ஆச்சு
கடுஞ்சினத்தை விட்டிடுமாமா மாமா (என்)
கஞ்சிகுடித்திடுவீர் கண்ணுளா—நெஞ்சங்களித்திடுவீர்
வஞ்சியாள்மீதுற்ற வாவிடுத்தது—செஞ்சொல்பேசிக்களை தீரஅடுத்து
இல்லத்தில் விட்டுவந்துயென்னுசையாம்—கண்ணுகுமாம் இளவல்லிக்கமுதளிக்க
ஏகிடவே வேண்டுமையோ நான் இனி நான்—இருந்திடுதல் ஏற்றதில்லையே-ஐயே
போகவிடைத் தந்தருள்வீரே-நேரே-இந்த பொற்கொடியாள் போற்றிடும் நாதா
நாதா (என்)

39 கிருஷ்ணன் (பாட்டு) காமீசத்யபாமா கதவைதிரவாய் என்ற மெட்டு

ராமா அதோ பாராய் ஜலக்ரீடை செய்கிறுர்
க்ரீடை செய்கிறுர் செய்கிறுர் செய்கிறுர் (ரா)
ஏமாற்றிடச்சேலையை எடுப்போம் நம் வேலையை
எவருங்காணுத நிலையை ஷி ஷி விகட (ரா)
அன்னையிடத்திலன்று சொன்ன கோள்களுக்கின்று
நன்று செய்வேன் தந்ரமொன்று ஷி ஷி (ரா)

40 இடைச்சிகளுக்கும் கிருஷ்ணனுக்கும் தர்க்கப் (பாட்டு)

இடைச்சி—தருவாய் நீயெனது சேலை கண்ணு கண்ணு மணிவண்ணு
மணிவண்ணு மாதர்களிடம் வாதா வாதா நவனீத
கிருஷ்ணன்—தரமாட்டேன் போடியிடச்சிகளே இடைச்சிகளே மடச்சிகளே
இடைச்சி—வண்ணுரப்பயலே வெட்கமில்லையா வெட்கமில்லையா மானமில்லையா
தராவிட்டாலுன்னன்னையிடம் சொல்லுவோம் சொல்லுவோம் இதைச்
சொல்லுவோம்

41 கிருஷ்ணன் (விருத்தம்) ராகம் காப்பி

மாதேயென்னன்னையிடஞ் சென்றே யென்மேல் வருத்தமுற
ஏதேதோ நிந்தைகள் சொன்னயிடைச்சிகளே
போதாதோ இத்தனை யின்னமும் உங்கட்குப் புத்தியில்லை
வாதேனோ செல்லுங்கள் ரோஷமிருந்தால் மடச்சிகளே

42 கிருஷ்ணன் (பாட்டு) மாதரசேமயிலே என்ற மெட்டு

மாதர்களேதுயிலே மட (மா)
தரமாட்டேனுமதுகையிலே—இட (மா)
மாதாவிடமுனமே யெந்தன் (மாதா)
நீங்கள்-வாதாடி கோள்கள்தினமே—சொன்ன (மாதா)
நீரனைவருமிணங்கி-ஒன்ருய் (நீரனை)
இருகரமேகூப்பி வணங்கித்தொழு (மாதர்)

43 இடைச்சி (பாட்டு)

ப்ரம்மானந்த வேணுகானமே ஹாஹா—பா (ப்ர)

சப்த—ஸ்வர ராக மழை மாரி தானுமே தோய்பா (ப்ர)

(தொகையறு)

மஹாசீலமா மாலோனுமான சுகாதீத மேலே° தருஞான

(பாட்டு)

வடிவாகுமாயன்மூரா ஹரிமாதவனாலே
படிமீதிலேசெவிபசுந் தாகவிதுகாலே
இங்கு வரலானதாகுமுக்காலுமே ஹா-ஹா-பா (ப்ர)

44 இடைச்சி (பாட்டு)

அல்குல்லின்னேரம் நல்குதே வேணுகானம் வேணுகானம் வேணுகானம்
அறியவேதான் வழியேபோய்நான்வருவேன் வேலையாதும் பெரிதல்லவே (அல்)

45 இடைச்சி (பாட்டு)

கேட்கும் நாதமே—சரவேட்கை சங்கீதமே (கே)
ஆஹா யீதென்ன கானம்—ஆனந்தமுத பானம்
நங்கையென்மனம் சுகந்தங்கவேயித்தினம் (கே)
ஆயர்களின் சீலன் நேயர்களின் லோலன்
அங்கோடுவேன் யின்பம்பொங்கப்பாடுவேன் (கே)

46 இடைச்சி (பாட்டு)

வேணுகானம் கேட்கின்றதே கேசவன் விநோதமாய் ஊதுகின்ற
என் செவிக்கே இன்பமிகவாகுதே (வே)
காணுமென் வேலைகள் யாவையும்போக்கி கானிலிருந்தாலும் போய்
கணவனும்வருமுன் கார்வண்ணனிடம் சென்றுகண்டுநான் வந்திடுவேன்
அங்குசென்று—கண்டுநான் வந்திடுவேன் (வே)

47 கிருஷ்ணன் (விருத்தம்) கேதார கௌளம்

நானே தனியாயிருந்தே மகிழவே நாடிவந்த
தானுமது மனையதிலுள்ள அலுவலதைத்
தேனே யெனப்பேசும் நீங்கள் விட்டேயேனேத்தேடிவந்த
தேனே அறியேன் உறைப்பீருண்மை யிடைச்சிகளே

48 இடைச்சிகள் (பாட்டு)

சங்கீதவேணுகானம் சந்தோஷமாகக்கேட்டு
தயங்காமல்ஓடிவந்தோம் சாரமே
இதுநேரமே நல்லநேரமே துயர்தீருமே
ஜெகத்தில்மதிப்பு மிகுத்தஅறிய (சங்)
ஆயாசந்தீரயிங்கே அன்பாயிருந்தேயின்பம்
அடைவோமெல்லோரும் விளையாடுவோம்
கீதம்பாடுவோம்-புகழ்தேடுவோம்—
அகத்தின்வருத்தம் விடுத்துபெருகும் (சங்)

49 கிருஷ்ணன் (விருத்தம்) கானடா ராகம்

சிந்தைமிகவும் மயங்கினதாய்ச்சொல்லும் சேயிழைகாள்
சொந்தபுருஷரை விட்டிங்கே நீங்கள் சுகமுறவே
வந்ததேகற்பில் தவறியதாக மதிப்பதன்றி
நிந்தையேநேரும் உமதில்லம் சேருவீர் நீதியிதே

50 கிருஷ்ணன் (பாட்டு) மஹர்சுகிர்த ரூபசுந்தரி என்ற மெட்டு
சதாஅமிர்த சாரந்தந்திடும் சுக—சரசமே புரிமாதரசிகாள்
இதோவருவேனினிமை தருவேன்—அதிவேகமதுடன் உமதொடு (சதா)
இதுசமயமே நாடுவேன்—மதிமாமுகவனிதை நீங்கள் மகிழநானுங்கூடுவேன்
பதிபுகழவே அதிபெருக்கவே—பழகியே யின்பம் தேடுவேன்
மதிகொள் கீர்த்தியே விடாத—வாக்ய நயமதே சரி (சதா)
வரிசையாக வருவீரிங்கு—வாகுடன் சந்தோஷமே
தேற்றிமிகவும் ஆற்றல்மேவவே—பலபலவிநய ஆடலதே
திரமொடினிது நாமே புரிகுவமே—இனி மீதிகலாதென நீர்
துயர் சேராதே வினைமாசதுமணுகாதே--ஜெயமேவரும் அஞ்சாமனதோடே (சதா)
வேலோ இதென்றே யாரும்—நிறையறமேவும் நயன
வனிதா மணிகுண ரதியே அருமை நிதியே—கோலாகல நாகரீகம்
அமைந்தரூப புகழ்ச்சி—மிக—வெறுத்த முனிவர்க்கு மினிமைத்தரும் (சதா)

51 இடைச்சிகள் (பாட்டு)
ராஜாராஜ ஸ்ரீகோபால கோலாகலசீல (ராஜ)
ராஜாதிராஜ பூஜ்யநந்த குமாரதீர (ராஜ)
கோபிகா சுஜமன மோகனு—கோவிந்த திவ்ய சரணு
சுசோகண சம்ரக்ஷணு—சுகோமள திவ்ய வதனு
கிருஷ்ணுவிலக்ஷணு கீர்த்திவிகர்த்தனு—கீதஞான வேணுகான ஆலாபனுசீல (ராஜ)

52 இடைச்சிகளுக்கும் கிருஷ்ணனுக்கும் தர்க்கம் (பாட்டு)
இடைச்சி—எந்தனோடு விளையாட வாடாகிருஷ்ணு
கிருஷ்ணன்—இதோநானே-வருவேனே
இடைச்சி—அங்கென்ன வேலை-யிங்கே நீவாடா
கிருஷ்ணன்—அன்புகொண்டே நானிங்கே விளையாடுவேன்
இடைச்சி—இது என்னநியாயமோ நீசொல்லடா
கிருஷ்ணன்—ஏனோயிந்தவாறு வீணில் வாதுபேசத்தகுமோ
இடைச்சிகள்—எந்தனோடு விளையாட

53 கிருஷ்ணன் (பாட்டு) ஆண்டவன்தரிசனமே என்ற மெட்டு
தாண்டவ மாடிடுவேன்—காளிங்கன் மாண்டிடச்செய்திடுவேன்
தீண்டிடானே கர்வம்—பூண்டிடானேயினி
தீர்ப்பேன் ஜலவிஷமே (காளிங்கன் மாண்டி)
மெத்த உமக்குத்துயர்—நித்தந்தானுயர்
சத்தியம் நான்விடேனே (காளிங்கன் மாண்டி)

54 நாக கன்னிகள் (பாட்டு)
வேண்டிநின்றோம் உமதுபாதமே—விரும்பிக்காப்பீரே நேரிலே (வே)
நீண்டநாளாய் செய்தகுற்றம்—நீக்குவீரின்றே நன்றே (வே)
ஆண்டவாநாங்களென்ன செய்வோம்—ஆளவேரில்லை யிதே (வே)

55 கிருஷ்ணன் (பாட்டு) ஜீவசிந்தாமணியே என்ற மெட்டு
அதிரூபசவுந்தர மாதரசிகளே—ஆதரிப்பேனே
இதையறிவீரென்று முண்மையாக—அருள்வேன் இனிநான்தப்பாதே
இனி இதைவிட்டுச் செல்வீரே—வேறுஇடத்தினிலிருந்து வாழ்வீரோ
இதைமனதினில்வைத் தறிவீரே
(தொகையறா)
துதிபுரியும் மொழிநயத்தில் சொக்கினேனே
மதிமுகமான விழியுடையீர்—மயங்கினேனே (அதி)

# கிருஷ்ணலீலா கதைச் சுருக்கம்.

தேவர்களும் முனிவர்களும் திருப்பாற்கடலுக்குச் சென்று கம்ஸனின் கொடுமை சகியாது விஷ்ணுவை பிரார்த்திக்க சேஷசயன காக்ஷியளித்து, தேவகியின் 8-வது புத்திரனாய் அவதரித்து கவலை தீர்ப்பதாய் தெரிவித்து கிருஷ்ணாவதார காக்ஷியளித்து மறைதல். சில ஆண்டுகளுக்குப்பின் கம்ஸன் தங்கை தேவகிக்கும் வசுதேவருக்கும் விவாகம் செய்து மணமக்களை ரதத்தில் ஏற்றி தானே ரதசாரத்யம் செய்தல். அசரீரியால் தேவகியின் 8-வது புத்திரனால் தனக்கு மரணம் என கேள்வியுற்ற கம்ஸன் தேவகியை வெட்டச் செல்லுதல். பிறக்கும் குழந்தைகளை தந்துவிடுவதாய் வசுதேவரும் தேவகியும் வாக்களித்ததால் இருவரையும் சிறையிலடைத்தல். 7 குழந்தைகளைப் பறிகொடுத்த தேவகி வசுதேவர் விஷ்ணுவைப் பிரார்த்திக்க விஷ்ணு தானே 8-வது குழந்தையாய் பிறப்பதாயும், குழந்தை பிறந்ததும் யமுனை கடந்து கோகுலத்தில் விட்டுவிட்டு அங்குள்ள பெண் குழந்தையை கொண்டுவரும்படி தெரிவித்து ஆசீர்வதித்து மறைதல். 8-வது குழந்தை ஜனித்ததும் கோட்டை வாயில்கள் தானே திறந்து கொள்ள, வசுதேவர் குழந்தையோடு கோகுலம் செல்லல். யமுனை வழி விடல். பெண் குழந்தையோடு திரும்புதல். கம்ஸன் 8-வது குழந்தை ஜனித்தது என்று கேள்வியுற்றதும் ஓடிவந்து குழந்தையைப் பிடுங்கி பாறையில்மோத சக்தியாக மாறி கம்ஸனின் அழிவைச் சொல்லி மறைதல்

கோகுலம், யசோதை, நந்தன், ஆயர் கூட்டம் யாவரும் கிருஷ்ணனைப் போற்றி செல்வமாக வளர்த்தல். கிருஷ்ணன் பையன்களோடும், தன் நேயன் ராமனோடும் சேர்ந்து வெண்ணை திருடுதலும், அவர்களிடம் தன் மாயாவினோதங்களை காட்டி அவர்களை துன்புறுத்துவதும் காண விந்தை. ஓரிடத்தில் வெண்ணை, பால் முதலிய சட்டிகளை பறந்துவரச் செய்தல், ஓரிடம் குரங்காய் மாறி இடைச்சியை ஏமாற்றல், பாம்பாய் மாறி பதறச் செய்தல், இவ்வித விளையாட்டுகளை இடைச்சிகள் சகியாது யசோதையிடம் முறையிட கிருஷ்ணன் சூழ்ச்சியால் இவர்களே குற்றவாளியாதல். இடைச்சிகள் ஜலக்ரீடை செய்யும்போது கிருஷ்ணன் சேலைகளை எடுத்து மறைதல். ராஜக்ரீடை செய்து இடைச்சிகளையும், இடையர்களையும், தன் வேணுகானத்தின் இனிமையால் வரவழைத்தல். அனைவர் தடுக்கவும் கேளாது காளிங்கன் மடுவில் குதித்து கொடிய காளிங்கன் கர்வத்தை அடக்கி மேலே வருதல். யாவரும் கரைமீது அழுது நிற்க, அனைவரும் ஆச்சர்யமுறுமாறு காளிங்கநர்தனம் செய்து காளிங்கனை துரத்தி யாவரையும் ஆசீர்வதித்தல்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

தேவர் முதல் யாவரும் புகழ்ந்து கொண்டாடும், நூதன
வர்ண மெட்டுகளால் அமைத்த பாடல்கள் நிறைந்தது,
தென்னிந்திய நாடக மேடைத் திலகங்கள் அநேகர் ஒன்று கூடி
நடித்ததும், பரமானந்தமான பாடல்கள் 60க்கு மேல்
நிறைந்ததும், கண்ணைக்கவரும் சீன்களும், நர்த்தனங்களும்,
ஆச்சர்யங்களும் நிறைந்த தமிழ் பேசும் படம் இதுஒன்றே




சோல் டிஸ்ட்ரிபியூடர்கள் :—

## ஏன்ஜல் பிலிம்ஸ், லிமிடெட்

சேலம் (தென்னிந்தியா)

COURT PRESS, SALEM.